**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 12.06.2025**
**OS. No. 234/2016**
**வழக்கு சாட்சி PW.1– கௌசிக்ராஜ் , த/பெ.சந்திரசேகர்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

இவ்வழக்கில் B செட்டியூல் சொத்தாக பிரதிவாதிகளின் சொத்தை காண்பித்துள்ளோம். B செட்டியூல் சொத்தின் நான்கு எல்லைகளில் தெற்கில் கணேசன் என்பவர் இடமும், வடக்கே பஞ்சாயத்து பொது வீதியும், கிழக்கே வெங்கடாஜலத்திற்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொது சுவரும், மேற்கில் பிரதிவாதிகளின் மீதி நிலமும் உள்ளது. அதன் விஸ்தீரணம் கிழமேல் இருபுறம் 22 அடி, தென்வடல் 41–1/2 என்று வழக்கில் காண்பித்துள்ளோம். மொத்த அளவு குறிப்பாக எனக்கு தெரியவில்லை. B செட்டியூல் சொத்தின் விவரங்கள் ஜீன் மாதம் 1989 ம் வருட ஆவணத்தில் பார்த்துள்ளேன், மேற்படி விவரங்கள் அந்த ஆவணத்தில்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் வீடு உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் 50 வருட கால வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தில் உள்ளதைதான் வழக்கில் B செட்டியூல் சொத்தாக காண்பித்துள்ளோம். அந்த ஆவணத்தில் அந்த வீட்டை கல், மண், கட்டை ஆகியவற்றை வைத்து கட்டியதாக காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த வீடு கிழமேல் 22 அடியும், தென்வடல் 36 அடியும் கொண்ட அளவுகளில் கட்டப்பட்டுள்ளதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வீட்டின் மொத்த விஸ்தீரணம் குறிப்பாக எனக்கு தெரியவில்லை. அந்த ஆவணத்தில் வீடு கட்டப்பட்டுள்ள இடம் போக மித காலி இடமும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் தலைவாசல் எந்த திசையில் உள்ளதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் எனக்கு நினைவில்லை. அந்த ஆவணத்தில் வீட்டை தவிர காலி இடத்திற்கு அளவுகள் காட்டி, தனியாக நான்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் அளவு குறிப்பாக தெரியவில்லை. அந்த காலி இடத்தின்

நான்கு எல்லைகள் மேற்கு மற்றும் தெற்கில் ராஜ்கவுண்டர் அவர்களின் வீடு மற்றும் விவசாய நிலமும், கிழக்கே சிவஞானம் அவர்களின் வீடும், வடக்கே வெங்கடாஜலம் அவர்களின் காலி நிலமும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ராஜ்கவுண்டர் அவர்கள் எனது தாத்தா ஆவார். மேற்கு பக்கமுள்ள விவசாய நிலத்தில் எந்த ஆண்டு வீடு கட்டப்பட்டது என்றால் குறிப்பாக வருடம் தெரியவில்லை, சுமார் 25 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்டது. 1989ம் வருடம் மேற்கில் வீடு எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீடுகள் உள்ளதாக எழுதப்படவில்லை என்றால் மேற்கில் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது, மேற்கில் விவசாய நிலம் உள்ளதாக மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கே வரிசை வீடுகள் உள்ளது என்றால் சரிதான், 25 வருடங்களுக்க முன்பு கட்டப்பட்டது. மேற்கில் வரிசை வீடுகள் 25 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்டது என்பதற்கு ஆதரவாக நாங்கள் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கிற்கும், அதற்கும் சம்மந்தம் இல்லாததால் நாங்கள் தாக்கல் செய்யவில்லை. மேற்கிலுள்ள வீடுகளிலிருந்து தண்ணீர் போவது சம்மந்தமாக தான் இந்த வழகக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. B செட்டியூல் சொத்திற்கும்,. எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். B செட்டியூல் சொத்தை பொறுத்து 1989ம் வருட ஆவணமான வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ளவாறு அளவுகள் மற்றும் நான்கு எல்லைகளை இவ்வழக்கில் நாங்கள் முறையாக காட்டவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் முழுவதுமாக படித்து பாத்தேனா என்றால் பார்த்தேன். அந்த ஆவணத்தில் மேற்படி வீட்டின் கிழபுறமுள்ள சுவர் கிரையம் பெறுபவருக்கும், வெங்கடாஜலம் என்பவருக்கும் பொதுவானது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது பத்தி 5ல் 11.05.1989ம் தேதிய கிரைய ஆவணத்திலுள்ள அளவுகள் குறித்து தவறான சங்கதிகளை நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள குறிப்பான சங்கதிகளுக்க மறுப்பு தெரிவித்து, பதிலுரை ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. B செட்டியூல் சொத்தை 1ம் பிரதிவாதி 20.06.2016ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணப்படி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 20.06.2016ம் தேதியிட்ட ஆவணத்தின்

அடிப்படையில் 1ம் பிரதிவாதி அனுபவத்தில் தான் B செட்டியூல் சொத்து உள்ளது என்றால் சரிதான். சிவஞானம் அவர்களின் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளை விட அதிகமான அளவுகளை 1ம் பிரதிவாதி 20.06.2016 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டு கிரையம் பெற்றதாக நாங்கள் தவறாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த வரைபடத்தில் H1 என்று குறிப்பிட்டுள்ள இடத்திற்கு வடக்கே சிவஞானம் அவர்களின் இடம் உள்ளது. அதன் அளவு 26 X 28 அளவுள்ள காலி மனை ஆகும். நாங்கள் தாக்கல் செய்த மாதிரி வரைபடம் தவறு என்றும், மஞ்சள் வண்ணம் இடப்பட்ட பகுதிதான் இது என்று குறிப்பிடுவதும் தவறு என்றால் சரியல்ல. சிவஞானம் அவர்களின் நிலத்திற்கு வடக்கு பக்கம் வெங்கடாஜலம் அவர்களின் இடம் உள்ளது. அதை தான் வா.சா.ஆ.9 மாதிரி வரைபடத்தில் நீல நிறமிட்டு காண்பித்துள்ளோம். நீல நிறமாக காண்பிக்கப்பட்ட இடம் வெங்கடாஜலம் அவர்களின் நிலம் என்பதும் தவறு என்றால் சரியல்ல. வெங்கடாஜலம் அவர்களின் இடத்திற்கு வடக்கே 7-1/2 அடி அகலம் கொண்ட பொதுப்பாதை உள்ளது. அந்த இடம் பொதுப்பாதை என்று யாரேனும் பஞ்சாயத்திற்கு எழுதி கொடுத்துள்ளனரா என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த இடத்தில் பொதுப்பாதை இருப்பதையும், அது பஞ்சாயத்து சாலை என்பதற்கும் ஆதரவாக ஆவணம் ஏதேனும் நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த பொதுப்பாதையை என்ன ஆங்கில எழுத்து கொண்டு காண்பித்துள்ளோம் என்றால் எனக்கு நினைவில்லை. அந்த பொதுப்பாதை B செட்டியூல் சொத்தையும், நீலம் மற்றும் மஞ்சள் நிறமிட்டு காட்டப்பட்ட சொத்தையும் பிரித்து இடையே செல்வதாக சொல்லியுள்ளதும் தவறு என்றால் சரியல்ல. பிராதில் பொதுப்பாதை ஒரு இடத்தில் 7-1/2 அடி என்றும், மற்றொரு இடத்தில் 8-1/2 அடி எனவும் மாற்றி மாற்றி காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்தேனா என்றால் பார்த்தேன். அதில் குறிப்பாக பத்தி 6 ல் ஒரு இடத்தில் 7-1/2 அடி என்றும், மற்றொரு இடத்தில் 8-1/2 அடி எனவும் மாற்றி மாற்றி காண்பித்துள்ளதாக குறிப்பாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை மறுத்து பதிலுரை எதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் சொல்வது போல் அளவுகள் கொண்ட பாதை எதுவும் இல்லை என்றும், பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கவேண்டி பொய்யாக தெரிவிக்கிறோம் என்றால்

சரியல்ல. வழக்கு சொத்துக்கள் இரண்டுமே எங்கள் பட்டா நிலம் இல்லை என்றால் சரிதான். எங்களுடைய பட்டா நிலமும், அதன் அளவுகளும், நான்கு எல்லைகளும் இவ்வழக்கில் நாங்கள் சொல்லவில்லை என்றால் தேவைப்படாததால் சொல்லவில்லை. எங்கள் நிலத்தின் பட்டா மற்றும் சர்வே எண்கள் குறித்து சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. முறையான வகையில் இவ்வழக்கை தாக்கல் செய்யாமல், பிரதிவாதிகளின் சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் குழப்பமான ஒரு வழகவை முன்னிட்டுள்ளோம் என்றும், அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த ஊரில் எங்கள் குடும்பம் செல்வாக்கு மிகுந்த குடும்பம் என்பதாலும், பிரதிவாதிகளின் வளர்ச்சியை கண்டு அவர்களை தொந்தரவு செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தங்கள் நிலத்திலுள்ள பழைய வீட்டை இடித்துவிட்டு, அந்த இடத்தில் புதியதாத வீடு கட்ட ஆரம்பித்தபோது தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் இருந்த கட்டுமான பகுதிக்கு மிகுதியாக எந்த கட்டிடமும் கட்டவில்லை என்றால் சரிதான், அவர்களின் ஆவணத்தில் அளவுகள் தவறாக உள்ளது. பிரதிவாதிகளின் முன் கிரையதாரர்கள் பத்திரத்தில் எவ்வளவு அளவுகள் இருந்தததோ அதே அளவை தான் பிரதிவாதிகள் கிரையம் பெற்று, தங்கள் கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டு அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த அளவில் மாறுபடுகிறது என்று குறிப்பாக எங்கள் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சிவஞானம் அவர்களிடமிருந்து சொத்தை நாங்கள் வாங்க முயற்சி செய்தோம் என்றும், பிரதிவாதிகள் வாங்கிவிட்டதால் நாங்கள் அவர்கள் மீதுள்ள பொறாமையில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 30 வருடங்களாக பொதுப்பாதை உள்ளதாகவும், அது பஞ்சாயத்து போர்டிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வழக்கில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை, ஆவணங்களில் உள்ளது. ஆவணங்களிலுள்ள விவரத்தை பிராதில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. பஞ்சாயத்து போர்டிற்கு யாரேனும் இடத்தை ஒப்படைத்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. பஞ்சாயத்து போர்டை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. பஞ்சாயத்து போர்டு சார்பாக பிரதிவாதிகள் பொதுப்பாதையை

ஆக்கிரமித்தார்கள் என்று அவர்கள் மீது தற்போது வரை எந்த நடவடிக்கையும் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுப்பாதை பஞ்சாயத்து போர்டின் கட்டுப்பாட்டில் உள்ளதாக பிராதில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. இந்த வழக்கு விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்நிலையில் நாங்கள் பஞ்சாயத்து போர்டு, சிவஞானம் ஆகியோரை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. விவசாய நிலங்களுக்கு பின்னிட்டு, வீடுகள் கட்டும்போது பஞ்சாயத்து போர்டில் பிளான் அப்புரூவல் ஏதேனும் நாங்கள் பெற்றோமா என்றால் 25 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்டதால் எனக்கு தெரியவில்லை. நாங்கள் வரிசையாக வீடுகள் கட்டிவிட்டு, அதிலுள்ள தண்ணீரை வெளியேற்றுவதற்கு பிரதிவாதிகளின் நிலத்தை பயன்படுத்த நினைப்பதற்கு ஆதரவாக நாங்கள் அந்த வீடுகளுக்கு முறையாக பிளான் அப்ரூவல் பெற்றதற்கு பரிசீலனை செய்தோமா என்றால் இல்லை, பொதுப்பாதையில் தான் தண்ணீர் வெளியேறுகிறது. நாங்கள் பிளான் அப்ரூவல் எதுவும் வாங்காமல் எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி, வீடுகள் கட்டி விட்டு, பிரதிவாதிகளை தொந்தரவு செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சந்து வாய்க்கால் 7-1/2 அடி அகலமாகும், அதில் பிரதிவாதிகளின் வீட்டிற்கு மேற்குபுறம் கழிப்பறை வாய்க்கால் உள்ளது, அந்த வாய்க்காலில்தான் எங்கள் வரிசை வீடுகளிலுள்ள தண்ணீர் சென்றடைகிறது. எங்களின் வரிசை வீடுகளுக்கு வடக்கே சிவஞானம் அவர்களின் காலி நிலம் உள்ளது, தெற்குபுறம் எங்களுடைய விவசாய நிலம் உள்ளது. எங்களுக்கு தெற்குபுறம் இடம் இருந்தபோதும், அங்கு அந்த கழிவு நீரை வெளியேற்றாமல், பிரதிவாதிகளை தொந்தரவு செய்வதற்காக எங்கள் வரிசை வீடுகளிலிருந்து கழிவு நீரை பிரதிவாதிகளின் வீடு வழியாக கொண்டு செல்ல இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, பொதுப்பாதை வழியாகத்தான் அந்த கழிவுநீரை கொண்டு செல்கிறோம். சிவஞானம் நிலத்திற்கு தெற்கு பக்கம் நான்கு வீடுகளும், அதற்கு எதிரே ஒரு வீடும் உள்ளது. பஞ்சாயத்து போர்டு கழிவுநீர் வாய்க்காலை பராமரிப்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வீடுகள் கட்டி 25 வருடங்கள் ஆனதாக நான் சொல்வதால், 30 வருடங்களாக அனுபவத்திலுள்ளதாக நான் வழக்கில் சொல்வது தவறு

என்றால் சரியல்ல. நான் முன்னுக்கு பின் முரணாக தெரிந்தே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளும், அவர்களது முந்தைய விற்பனையாளர்களும் நாங்கள் வாய்க்கால் பயன்படுத்தி வருவதற்கு எவ்வித அனுமதியும் வழங்கவில்லை என்றால் சரிதான், அது பொதுவான பாதை என்பதால் அவர்கள் அனுமதி அளிக்க அவசியம் இல்லை. எங்கள் வழக்கில் பிரதிவாதிகளிடமும், அவர்களது முந்தைய விற்பனையாளர்களிடமும் அனுமதி பெற்று, நாங்கள் அனுபவிப்பதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எங்கள் வீடுகளுக்கு குடிநீர் வசதி எப்போது பெறப்பட்டது என்றால் நினைவில்லை. அந்த குடிநீர் பைப்பை பிரதிவாதிகளின் இடம் வழியாக கொண்டு செல்வதற்கு பிரதிவாதிகளிடமும், அவர்களது முந்தைய விற்பனையாளர்களிடமும் நாங்கள் எவ்வித அனுமதியும் வாங்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் பைப் லைன் அமைத்துக்கொள்வதற்கு பஞ்சாயத்தில் ஏதேனும் அனுமதி பெற்றோமா என்றால் இல்லை, பஞ்சாயத்து போர்டு தான் பைப் லைன் போட்டுக்கொடுத்தார்கள். வழக்கில் ஓலைப்பட்டி பஞ்சாயத்து போர்டு அனுமதியின் பேரில் பைப்லைன் அமைக்கப்பட்டதாக வழக்கில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அந்த அனுமதிக்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த வரி ரசீதுகள் அனுமதி வழங்கியதற்கானது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 25.06.2025ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.